RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 11 ஜனவரி.17 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# வளர்ச்சி, தொலைநோக்குப் பார்வையின் தாக்கமே மஹா. உள்ளாட்சித் தேர்தல் வெற்றி; பிரதமர் மோடி வாழ்த்து

புதுடில்லி: ஜன.17-

வளர்ச்சிக்கான எங்களின் சாதனையும், தொலைநோக்குப் பார்வையும் மஹாராஷ்டிரா உள்ளாட்சித் தேர்தலில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பிரதமர் மோடி கூறி உள்ளார்.

மஹாராஷ்டிரா உள்ளாட்சித் தேர்தலில் பாஜ தலைமையிலான கூட்டணி பெரும்பான்மையான இடங்களை கைப்பற்றி உள்ளது. மும்பை மாநகராட்சித் தேர்தலில் கிடைத்த இந்த வெற்றியின் மூலம் 30 ஆண்டுகால தாக்கரே குடும்பத்தின் ஆதிக்கம் முடிவுக்கு வந்து இருக்கிறது.

உள்ளாட்சித் தேர்தலில் கிடைத்த வெற்றியை பாஜவினரும், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினரும் கொண்டாடி வருகின்றனர். இந் நிலையில், தேர்தல் வெற்றி குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள பிரதமர் மோடி, மஹாராஷ்டிரா மாநில மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது எக்ஸ் பதிவில் கூறி உள்ளதாவது;

மஹாராஷ்டிரா முழுவதும் அயராது உழைத்த ஒவ்வொரு தேசிய ஜனநாயக கூட்டணியின் தொண்டர்களை நினைத்து நான் மிகவும் பெருமை அடைகிறேன். எங்கள் கூட்டணியின் சாதனைகளை மக்களிடம் எடுத்து பேசியுள்ளனர்.

எதிர்காலங்களில் எங்களின் தொலைநோக்கு பார்வையை எடுத்துக் கூறி உள்ளனர். களத்தில் எதிர்க்கட்சிகளின் பொய்களை திறம்பட எதிர்கொண்டு இருக்கின்றனர்.



அவர்களுக்கு என் வாழ்த்துகள். மஹாராஷ்டிராவுக்கு நன்றி.

மக்களுக்கான நல்லாட்சி, சிறந்த நிர்வாகம் என்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் செயலை மக்கள் ஆசிர்வதித்து உள்ளனர். பல்வேறு நகராட்சிகளின் தேர்தல் முடிவுகள்,மக்களுடனான பிணைப்பை மேலும் வலிமைப்படுத்தும் என்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் குறிக்கோளை உணர்த்துகிறது.

வளர்ச்சியை நோக்கிய எங்களின் சாதனைகள், முன்னேற்றத்தை நோக்கிய எங்களின் பார்வைகள் ஒருங்கே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. முன்னேற்றத்திற்கு உத்வேகம் அளிக்கவும், மாநிலத்தின் புகழ்மிக்க கலாசாரத்தை கொண்டாடவும் கிடைத்த ஒரு அங்கீகாரம்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறி உள்ளார்.

அமித் ஷா வாழ்த்து

மஹாராஷ்டிரா தேர்தலில் பாஜகசிவசேனா கூட்டணி பெற்ற மகத்தான வெற்றி, நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள மக்கள் பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வளர்ச்சிக் கொள்கைகளில் மட்டுமே முழுமையான நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி, மாநிலத்தில் மகாயுதி அரசால் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி மற்றும் மக்கள் நலப் பணிகளுக்கு மக்கள் அளித்த ஒப்புதலின் முத்திரையாகும். மகத்தான ஆதரவளித்த மஹாராஷ்டிர மக்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி கனிமொழி அவர்கள் சந்தித்து, பொங்கல் வாழ்த்துப் பெற்றார்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சந்தித்து, பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் சந்தித்து. பொங்கல் வாழ்த்துப் பெற்றார்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.கூஸ்டாலின் அவர்களை தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் திரு. கி. வீரமணி அவர்கள் சந்தித்து, பொங்கல் வாழ்த்து தெரிவித்தார். உடன், திராவிடர் கழக பொதுச் செயலாளர் திரு. வீ. அன்புராஜ் அவர்கள் உள்ளார்.

# “ஜல்லிக்கட்டு விழாவை திமுகவின் குடும்ப விழாவாக மாற்றுவதா?” ஆர்.பி. உதயகுமார் காட்டம்

மதுரை: ஜன.17-

‘‘பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டியை மரபுபடி காலை 7 மணிக்கு தொடாங்காமல் துணை முதல்வர் உதயநிதிக்காக ஒன்றரை மணி நேரம் தாமதப்படுத்தி, போட்டியை காண வந்த மக்களையும், போட்டியில் பங்கேற்ற மாடுபிடி வீரர்கள், காளைகள், அதன் உரிமையாளர்களை வேதனைப்படுத்தலாமா? என்று சட்டப்பேரவை எதிர்கட்சித் துணைத்தலைவர் ஆர்பி. உதயகுமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் சார்பில் திருமங்கலம், சோழவந்தான், உசிலம்பட்டி ஆகிய தொகுதிகளில் பொதுமக்கள் பங்கேற்கும் பொங்கல் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று வருகிறது. சோழவந்தான் தொகுதி தனிச்சியத்தின் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை ஆர்.பி.உதயகுமார் தொடங்கி வைத்தார். இதற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.மாணிக்கம் தலைமை தாங்கினார்.

ஆர்.பி.உதயகுமார் கூறியதாவது: தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது போல மீண்டும் தமிழகத்தில் பழனிசாமி தலைமையில் அதிமுக ஆட்சி மலர வேண்டும் என்று அம்மா பேரவை சார்பில் தொடர்ந்து மூன்று நாட்களில் மூன்று தொகுதிகளில் ‘எடப்பாடியார் பொங்கல்’ நடைபெற்று வருகிறது. உலகப் பிரசித்தி பெற்ற அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய ஜல்லிக்கட்டு போட்டிகள் மன்னராட்சி முதல் தற்போது மக்களாட்சி வரை மக்கள் ஜல்லிக்கட்டாக நடைபெற்று வந்தது.

ஆனால் தற்போது துணை முதல்வர் உதயநிதிக்காகவும், முதல்வர் ஸ்டாலினுக்காக ஜல்லிக்கட்டு நடத்துவது போல் ஆகிவிட்டது. இன்று பாலமேடு ஜல்லிக்கட்டில் அதிகாலையில் இருந்து மாடுபிடி வீரர்களும், காளைகளும், பார்வையாளர்களும் தமிழகம் முழுவதும் வந்திருந்து காத்திருந்தனர். ஆனால், போட்டி திட்டமிட்டப்படியும்,



மரபுபடியும் காலை 7 மணி முதல் 8 மணிக்குள் தொடங்கப்பட வேண்டும்.

இப்படிதான் காலம் காலமாக இந்த நேரங்களில் போட்டிகள் தொடங்கப்பட்டது. ஆனால், பாலமேடு ஜல்லிக்கட்டு இன்று மரபுபடி 7 மணி முதல் 8 மணி வரை தொடங்கப்படப் படவில்லை. 9.30 மணி தாண்டியும் தொடங்கப்படாமல் மாடுபிடி வீரர்கள், பார்வையாளர்கள், காளைகளை வேதனைக் குள்ளாக்கின்றனர்.

உதயநிதிக்காக வேடிக்கை ஜல்லிக்கட்டு போட்டியை நடத்துகிறார்கள். திமுக அரசின் அதிகார துஷ்பிரேகம் எல்லை மீறிச் சென்று விட்டது.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் காளை வளர்ப்போருக்கு ஊக்கத்தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால், முதல்வர், துணை முதல்வர், அந்த வாக்குறுதியை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு விழாவில் அறிவிப்பார்களா என்று மக்களிடத்தில் எதிர்பார்ப்பு இருக்கிறது.

முதல் முதலாக ஜல்லிக்கட்டு போட்டியில் உலக கவனத்தை ஈர்க்கும் வகையில் ஜல்லிக்கட்டு வீரர்களுக்கும், ஜல்லிக்கட்டு காளை வளர்ப்போருக்கு காரை பரிசளித்தது அதிமுக ஆட்சியில் முதல்வராக இருந்த பழனிசாமிதான். அதேபோல ஜல்லிக்கட்டு உரிமையை பாதுகாத்து மீண்டும் மீட்டுத் தந்ததும் அதிமுக ஆட்சியில்தான். ஜல்லிக்கட்டுக்காக எந்த ஒரு முயற்சியும் செய்யாத இந்த அரசு வீட்டு உரிமையைப் போல ஜல்லிக்கட்டு விழாவை மாற்றலாமா? ஜல்லிக்கட்டு விழா என்பது நாட்டின் சொத்து.

அதை வீட்டின் சொத்தாக்க முயற்சிக்கலாமா? ஜல்லிக்கட்டு விழாவை திமுகவின் குடும்ப விழாவாக மாற்றலாமா? இனி எத்தனை நாட்களுக்குத்தான் மக்கள் பொறுத்திருப்பார்கள்? ஜல்லிக்கட்டு வாடிவாசலை இளவரசர், மன்னர் வரும் வரை காத்திருந்து திறக்கிறார்கள். மீண்டும் பழனிசாமி ஆட்சிக்கு வருவார். அப்போது மக்கள் விரும்பும் கிராம கமிட்டியை முன்னிறுத்தி ஜல்லிக்கட்டு விழா அகிலம் போற்றும் வகையில் நடைபெறும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



# மேடவாக்கத்தில் உள்ள காயிதே மில்லத் ஆடவர் கல்லூரியில் விலையில்லா மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

மேடவாக்கம் ஜன 17-

தமிழ்நாடு அரசின் உலகம் உங்கள் கையில் திட்டம் என்ற திட்டத்தின் கீழ், விலையில்லா மடிக்கணினி வழங்கும் நிகழ்வு மேடவாக்கத்தில் உள்ள காயிதே மில்லத் ஆடவர் கல்லூரியில் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் தேதி நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் டாக்டர் எம்.அம்துல் தவாப், சிறப்பு விருந்தினர்களையும் மாணவர்களையும் வரவேற்றார். கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் எம்.ஜி.தாவூத் மியாகான் தனது தலைமை உரையில், காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்களின் ஒழுக்கமான வாழ்க்கை மற்றும் மிகக் குறைந்த கட்டணத்தில் தரமான கல்வியை வழங்குவதில் கல்லூரி கொண்டுள்ள அர்ப்பணிப்பு குறித்து எடுத்துரைத்தார்.

சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட முன்முயற்சிகள் குறித்து விளக்கினார்.

பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, அரசுத் திட்டங்கள் குறித்து விவரித்ததுடன், மடிக்கணினிகளை மாணவர்கள் ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். மேடவாக்கம் பஞ்சாயத்து தலைவர் சிவபூஷணம் ரவி, செயின்ட் தாமஸ் மவுண்ட் ஒன்றியத் தலைவர் சங்கீதா பாரதிராஜா மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். மொத்தம் 491 மாணவர்கள் இலவச மடிக்கணினிகளைப் பெற்று பயன் அடைந்தனர்.

# தாராபுரம் நகராட்சியில் சமத்துவ பொங்கல் விழா 230 தூய்மைபணியாளர்களுக்கு தலைவர் பாப்புகண்ணன் சொந்த செலவில் வேட்டிசேலை வழங்கினார்

தாராபுரம் ஜன.17-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி அலுவலகத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி சமத்துவ பொங்கல் விளையாட்டு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு நகர்மன்ற தலைவர் பாப்பு கண்ணன் தலைமையிலும், நகராட்சி ஆணையாளர் முஸ்தபா முன்னிலையிலும், நகராட்சி கவுன்சிலரும் திமுக நகர செயலாளருமான முருகானந்தம் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்தார். தமிழர்களின் பாரம்பரிய திருநாளான பொங்கல், உழவர்களின் உழைப்பை போற்றும் நாளாகவும், இயற்கைக்கு நன்றி கூறும் விழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், சாதி, மத, வேறுபாடுகள் இன்றி அனைவரையும் ஒரே மேடையில் இணைக்கும் நோக்கில் தாராபுரம் நகராட்சியின் சார்பில் சமத்துவ பொங்கல் விழா நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகராட்சி அலுவலர்கள், நகராட்சி



கவுன்சிலர்கள், தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் உற்சாகமாக கலந்து கொண்டனர். விழாவை முன்னிட்டு கோலப்போட்டி, கயிறு இழுத்தல், பானை உடைத்தல், மியூசிக் சேர், கும்மியாட்டம் உள்ளிட்ட பல்வேறு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பெண்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆர்வமுடன் பங்கேற்று பார்வையாளர்களின் கைதட்டலை பெற்றனர். இதனைத் தொடர்ந்து, அனைத்து ஊழியர்களும் ஒன்றாக இணைந்து சமத்துவ பொங்கல் இட்டு கொண்டாடினர். அப்போது அனைவரும் ஒருவருக்கொருவர் பொங்கல் மற்றும் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். மேலும், நகர்மன்ற தலைவர் பாப்புகண்ணன் தூய்மை பணியாளர்கள் 230 பேருக்கு வேட்டி, சேலைகளை வழங்கி அவர்களை கௌரவித்தார். நிகழ்ச்சியில் பேசிய நகர்மன்ற தலைவர் பாபு கண்ணன், "பொங்கல் என்பது உழைப்பையும் மனித நேயத்தையும் போற்றும் திருநாள். நகராட்சியின் வளர்ச்சியில் தூய்மை பணியாளர்களின் பங்கு மிக முக்கியமானது. அவர்களை கௌரவிப்பதே இந்த சமத்துவ பொங்கல் விழாவின் நோக்கம்," என தெரிவித்தார்.

நகராட்சி ஆணையாளர் முஸ்தபா பேசுகையில், "பொங்கல் விழா தமிழர்களின் பண்பாடு, ஒற்றுமை, சகோதரத்துவத்தை வெளிப்படுத்தும் திருநாள். அனைவரும் சமமாக கலந்து கொள்வதன் மூலம் சமத்துவம் நிலைநாட்டப்படுகிறது. இத்தகைய விழாக்கள் ஊழியர்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்," என்றார். இதன் தொடர்ச்சியாக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருள்கள் மற்றும் நினைவுக் கோப்பைகள் வழங்கப்பட்டன. விழா முழுவதும் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என உற்சாகமாக நடைபெற்று, அனைவருக்கும் மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது. சுகாதார அலுவலர். மணிகண்டன் வரவேற்பு உரை வழங்கினார்.

தாராபுரம் நகராட்சி கவுன்சிலர்கள்: சக்திவேல், யூசுப், சாஜிதாபானு, செல்வராஜ், சுரேஷ், சந்திரசேகர், உமா மகேஸ்வரி, சரஸ்வதி, ஷாலினி அவர் சேகர் மற்றும் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பவர் சேகர் மீனவர், அணி துணைத்தலைவர் மரக்கடை கணேசன், மீனவர் அணி. நிகழ்ச்சி அமைப்பாளர் சர்வேயர் இளங்கோ, ஒரு லிட்டர் ஏராளமான பணியாளர்கள் மற்றும் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.



# தேவகோட்டை நகராட்சியில் புதிய முயற்சி: மாணவர்களுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கும் திட்டம்

தேவகோட்டை ஜன 17-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகராட்சியில் பசுமைப் பரப்பளவை அதிகரிக்கவும், கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் மற்றும் இயற்கை உரம் வழங்கும் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

கழிவு மேலாண்மை மற்றும் உர உற்பத்தி

தேவகோட்டை நகராட்சியின் 27 வார்டுகளில் இருந்து நாள்தோறும் சுமார் 18 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. இதில்:

* சுமார் 4 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகள் ராம்நகர், சருகனி சாலை மற்றும் புதூர் அக்ரஹாரம் நுண்ணுரச் செயலாக்க மையங்களில் உரமாக்கப்படுகின்றன.
* 1 மெட்ரிக் டன் கழிவுகள் மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகின்றன.
* மறுசுழற்சி செய்ய இயலாத எஞ்சிய 8 மெட்ரிக் டன் கழிவுகள் சிமெண்ட் ஆலைகளுக்கு எரிபொருளாக அனுப்பப்படுகின்றன.

பசுமைப் பரப்பளவை அதிகரிக்கும் பணிகள் ஏற்கனவே ராம்நகர் நுண்ணுரச் செயலாக்க மையத்தில் 500 மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், தற்போது புதூர் அக்ரஹாரம் வளாகத்தில் 100 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும், அங்கு 1,000 மரக்கன்றுகள் கொண்ட நர்சரி (நாற்றுப்பண்ணை) உருவாக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான விழிப்புணர்வு மரம் வளர்ப்பின் நன்மைகள் மற்றும் கழிவு மேலாண்மை குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், ஆர்வமுள்ள மாணவ, மாணவியர்களுக்கு நகராட்சி சார்பில் இலவச மரக்கன்றுகளுடன் இயற்கை உரமும் வழங்கப்பட உள்ளது. ஆய்வு மற்றும் பங்கேற்பு இந்நிகழ்வில் நகர்மன்றத் தலைவர் கா. சுந்தரலிங்கம் மற்றும் ஆணையாளர் மு. அஜிதா பர்வின் ஆகியோர் மரக்கன்றுகளை நடவு செய்து, புதிய நர்சரியைப் பார்வையிட்டனர். இதில் துப்புரவு அலுவலர் பா. பாண்டிசெல்வம் மற்றும் பொது சுகாதாரப் பிரிவு பணியாளர்கள் கலந்துகொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் கண்டவராயன் பட்டி கிராமத்தில் மாட்டுப் பொங்கல் முன்னிட்டு பண்டாரத்தார் பங்காளிகள் இல்லங்களில் பட்டி பெலுக பால் பான பொங்கலே பொங்கல் பொங்க பொங்க என்று கூறிக்கொண்டு திருஷ்டி சுத்தும் அற்புதக் காட்சிகளால் உறவினர்களுக்குள் மன நெகிழ்வுடன் சிறப்பாக பொங்கலை கொண்டாடினர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருள்மிகு ஆனந்தவல்லி சோமநாதர் கோயிலில் நேற்று பிரதோஷ வழிபாடு சிறப்பாக நடைபெற்றது.வழிபாட்டின் ஒரு பகுதியாக, உற்சவர் சோமநாத சுவாமியும் ஆனந்தவல்லி அம்மனும் வெள்ளி ரிஷப வாகனத்தில் வெள்ளி ஆட்டுக்கிடாய் வாகனத்தில் எழுந்தருளி, கோவில் உட்பிரகாரத்தை மூன்று முறை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.



# தேனி பெரியகுளம் காவல் நிலையத்தில் பாரம்பரிய முறைப்படி பொங்கல் விழா கொண்டாடினர்

தேனி ஜன. 17-

தேனி பெரியகுளம் சாலையில் உள்ள தேனி நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர்கள் ராமலட்சுமி, ஜவகர் ஆகியோரது தலைமையில் தைத்திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு பொங்கல் விழா கொண்டாடப்பட்டது இந்த பொங்கல் விழா நிகழ்ச்சியில் பாரம்பரிய முறைப்படி விறகடுப்பு வைத்து பொங்கல் பானையில் பொங்கல் தயார் செய்து கரும்பு தோரணம் அமைப்பு இறைவனுக்கு பொங்கல் படையல் இட்டு பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடினர் நிகழ்வில் முக்கியமாக காவல் நிலையத்தில் அனைவரும் பாரம்பரிய உடை அணிந்து பொங்கல் விழா கொண்டாட்டினர் இந்த நிகழ்வில் சார்பு ஆய்வாளர்கள் காவலர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பொங்கல் விழாவை சிறப்பித்தனர்.

# பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனருக்கு அரசு சார்பில் மணிமண்டபம்

## தமிழக முதல்வர் திறந்து வைக்க உள்ளார்

ராமநாதபுரம், ஜன.17-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனருக்கு அரசு சார்பில் மணிமண்டபம் கட்டப்பட்டு நாளை தமிழக முதல்வர் திறந்து வைக்க உள்ளார் இந்த நிலையில் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அனைத்திந்திய அண்ணா திராவிட



முன்னேற்றக் கழகத்தின் ஒன்றிய செயலாளர் கள்ளிக்குடி கோபாலகிருஷ்ணன் வீடியோ ஒன்று வெளியிட்டுள்ளார் அதில் தமிழகத்திலேயே கடந்த ஆண்டு மணி மண்டபம் அமைப்பதற்காக வாக்குறுதி அளித்தனர் அதன் அடிப்படையிலேயே மணிமண்டபம் பணிகள் நிறைவு பெற்றது இன்று 17ம் தேதி தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் வந்து திறந்து வைப்பதாக அறிவி க்கப்பட்டது போல சட்டமன்றத் தேர்தலை கருத்தில் கொண்டு நம்மளுடைய வாக்கு எதற்காக வாக்களிக்கிறோம் என்று தெரியாத வண்ணம் இருக்க கூடிய மக்களை ஏமாற்றும் விதமாக கௌரவப்படுத்தக் கூடிய வகையில் அந்த வார்த்தை வாசகம் அமையவில்லை என்பதை என் சார்ந்த மக்களுக்கு நான் அறிவிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்..



# மேற்கு தாம்பரத்தில் 2ஆம் ஆண்டு சமத்துவ பொங்கல் விழா

தாம்பரம் ஜன 17-

செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் மௌலானா நகர் பகுதியில் செயல்பட்டு வரும் மௌலானா நகர் இளைஞர் நற்பணி நலச்சங்கம் மற்றும் மகளீர் குழு சார்பில் 2ஆம் ஆண்டு சமத்துவ பொங்கல் விழா சங்க தலைவர் கார்த்திக் தலைமையில், செயலாளர் மாரித் ராகேஷ், பொருளாளர் அஜித் ஆகியோரின் முன்னிலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவை யொட்டி கோலம் போட்டி,உரியடி போட்டி,கயிறு இழுத்தல் பானை உடைத்தல் பல்வேறு போட்டிகள் நடத்தபட்டது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக தாம்பரம் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, மண்டல குழு தலைவர் டி.காமாராஜ் ,வட்ட செயலாளர் வினோத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். போட்டகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தாம்பரம் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்கள் பரிசுகள் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.முன்னதாக சங்க பெயர் பலகைகள் சட்ட ஆலோசகர் ராதிகா, மாமன்ற உறுப்பினர் சுரேஷ் ஆகியோர் திறந்து வைத்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர். இதில் சங்க ஆலோசகர் இந்திரகுமார், சங்க காப்பாளர்கள் மணி, சேகர் (எ) கணேசன், துணை தலைவர்கள், துணை செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், உறுப்பினர்கள், மகளீர்கள், மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# ஆயக்குடியில் மாரிமுத்து நினைவு மினி மாரத்தான் போட்டி

திண்டுக்கல், ஜன.17-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த பழைய ஆயக்குடி கொய்யா மார்க்கெட் திடலில் தமிழர் திருநாளை முன்னிட்டு இயற்கையை போற்றுவோம் மண்வளத்தை காப்போம் என்ற தலைப்பில் சி.மாரிமுத்து நினைவு மினி மாரத்தான் போட்டி நடைபெற்றன.

இவ்விழாவினை சாகித்திய அகடாமி விருது பெற்ற எழுத்தாளர் தர்மன் மற்றும் பழனி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் ஆகியோர் கொடியசைத்து மினி மாரத்தான் போட்டியை தொடங்கி வைத்தனர்..







விழாவில் முதன்மை வருமான வரித்துறை ஆணையர் (ஓய்வு) பெற்ற கிருஷ்ணசாமி மற்றும் இந்திய ஆட்சிப் பணி (ஓய்வு) கரிகாலன்.

தென்னக இரயில்வே (ஓய்வு) மயில்சாமி ஆடிட்டர் மணிமாறன் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

தொடர்ந்து இப்போட்டியில் முதலாவதாக வெற்றி பெற்ற கேரள மாநிலத்தைச் சேர்ந்த அஜித் என்பவருக்கு டிஎஸ்பி தனஜெயன் ஊக்கத்தொகை மற்றும் சுழல் கோப்பையை வழங்கினார்.

இரண்டாவது இடம் பிடித்த பெங்களூரைச் சேர்ந்த அப்தாமு என்பவருக்கு தர்மன் ஊக்கத்தொகை சுழற் கோப்பை வழங்கினார்.

மூன்றாவது இடம் பிடித்த சுரேஷ் என்பவருக்கு மயில்சாமி ஊக்கத்தொகை உலகக்கோப்பையை வழங்கி சிறப்பித்தார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் சித்தாக்கு சண்முகம் பெரியதுரை ராமராஜ் பாலசேகரன் மயில்சாமி,ராஜா, சர்க்கரை செல்வராஜ் விக்னேஸ்வரன் பழனிச்சாமி சசிகுமார் கிருஷ்ணன் கவிமணி கமலக்கண்ணன் முத்துச்சாமி சரவணன், வினோத், அண்ணாதுரை செல்லத்துரை கருணாநிதி தர்மராஜ் சத்தியமூர்த்தி பாலகுமார் செல்வ கிருஷ்ணன் விஜய்,துரையரசு, ரோகித் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு மினி மாரத்தான் போட்டி நடைபெற்றன. இந்த போட்டியில் 200க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டு ஆயக்குடி முதல் சட்டப்பாறை வரை 16 கிலோமீட்டர் சென்று வந்தனர்.தொடர்ந்து ஒன்று முதல் பத்து வரை வந்த 10 வீரர்களுக்கு விழா குழுவின் சார்பாக பரிசுகளும் கோப்பைகளும் வழங்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் விளையாட்டு வீரர்களும் காவல்துறையினரும் திரளாக கலந்து கொண்டனர்...

# ஊரப்பாக்கத்தில் கோல போட்டி




ஊரப்பாக்கம் ஜன 17-

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாட்டுப் பொங்கல் அன்று ஊரப்பாக்கம் மேற்கு பகுதி 8வது வார்டு செல்வராஜ் நகர், சாட்சி பிள்ளையார் கோவில் அருகில் கோலப்போட்டி நடைபெற்றது. இந்த கோல போட்டியை எட்டாவது வார்டு கவுன்சிலர் விஜயரங்கன், அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். மேலும் யூபிஎம்,

ஜிம் நண்பர்கள் குழு கோலப்போட்டியை ஒருங்கிணைத்தவர்.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ரேகா கார்த்திக், அவர்கள் கலந்து கொண்டு கோல போட்டியில் வெற்றி பெற்ற பெண்களுக்கு முதல் பரிசு 6 ஆயிரம் ரூபாய், இரண்டாம் பரிசு ரூ 3000 ரூபாய், மூன்றாம் பரிசு 4 நபர்களுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் பரிசுகளை வழங்கினார்கள்.

மேலும் நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டு பல வண்ணங்களில் கோலங்களை போட்டு நமது பாரம்பரிய விவசாய சம்பந்தமான கோலங்கள், ஜல்லிக்கட்டு கோலங்கள், கம்பி கோலங்கள்,

3பீ வடிவத்தில் கோலங்களை போட்டு பரிசுகளை அள்ளி சென்றனர். மேலும் நிகழ்ச்சியில் எட்டாவது வார்டு பகுதி சேர்ந்த ஏராளமான பெண்கள்.. மற்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# எதிர்மறை சிந்தனையின் தலைவர்' ராகுல் காந்தி: பாஜக விமர்சனம்



'புதுடெல்லி:, ஜன.17-

இந்தியாவின் மூன்றாவது காலாண்டு வளர்ச்சி எதிர்பார்த்ததைவிட வலுவாக இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் பாராட்டி உள்ள நிலையில், இந்திய பொருளாதாரத்தை கடுமையாக விமர்சித்த ராகுல் காந்தியை 'எதிர்மறை சிந்தனையின் தலைவர்' என்று பாஜக விமர்சித்துள்ளது. இது தொடர்பாக பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் சி.ஆர்.கேசவன் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், ''தீய எண்ணத்துடன் பொய் சொல்லி நமது இந்திய பொருளாதாரத்தைப் பற்றி அவதூறு பரப்பிய 'எதிர்மறை சிந்தனையின் தலைவர் (லிமீணீபீமீக்ஷீ ளியீ றிமீtவீனீவீsனீ) ராகுல் காந்தி, இப்போது நமது தேசத்திடமும் மக்களிடமும் பகிரங்கமாக மன்னிப்பு கேட்பாரா?

இந்தியப் பொருளாதாரத்தை சர்வதேச நாணய நிதியம் பாராட்டி உள்ளது. இது, நமது தேசத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் சீர்குலைக்கு முயன்ற ராகுல் காந்தியின் போலி பிரச்சாரத்துக்கும் மலிவான அரசியல் செயல்பாடுகளுக்கும் ஒரு சரியான பதிலடி ஆகும். ராகுல் காந்தி தனது குறுகிய, தோல்வி அடைந்த அரசியல் செயல் திட்டத்தை முன்னெடுப்பதற்காக இந்தியாவை தவறாகப் பேசுவதிலும், அவதூறு செய்வதிலும் எந்த குற்ற உணர்ச்சியும் வருத்தமும் இன்றி இருப்பதால், அவர் நமது மக்களால் மீண்டும் மீண்டும் நிராகரிக்கப்படுகிறார்'' என தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி தலைமையிலான அரசாங்கத்தின் மீது தொடர்ந்து விமர்சனங்களை முன்வைத்து வரும் ராகுல் காந்தி, இந்திய பொருளாதாரம் செயலிழந்துவிட்டது என்று கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் விமர்சித்திருந்தார். ரஷ்யாவிடம் இருந்து இந்தியா எண்ணெய் வாங்கியதற்காக இந்தியா மீது அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் வரிகளை விதித்தார். அப்போது அவர், இந்திய பொருளாதாரம் என்பது செயலிழந்த பொருளாதாரம் என விமர்சித்திருந்தார். ட்ரம்ப்பின் இந்த விமர்சனத்தை அடுத்து, ''இந்தியப் பொருளாதாரம் ஒரு செயலிழந்த பொருளாதாரம் என்பது அனைவருக்கும் தெரியும். அதிபர் ட்ரம்ப் ஒரு உண்மையைச் சொல்லி இருக்கிறார். அதில் எனக்கு மகிழ்ச்சி. இந்திய பொருளாதாரம் ஒரு செயலிழந்துபோன பொருளாதாரம் என்பது முழு உலகுக்கும் தெரியும். ஆனால், பிரதமர் மோடிக்கும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் மட்டும் தெரியாது'' என்று ராகுல் காந்தி கடுமையாக கூறி இருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பாராட்டு: 2025ம் ஆண்டின் இந்திய வளர்ச்சி குறித்த கேள்விக்கு நேற்று பதில் அளித்த சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புத் துறை இயக்குநர் ஜூலி கோசாக், ''சர்வதேச நாணய நிதியத்தின் சமீபத்திய மதிப்பீடு, 202526 நிதியாண்டுக்கான இந்தியாவின் வளர்ச்சி 6.6 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் உள்நாட்டு நுகர்வை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவின் மூன்றாம் காலாண்டு வளர்ச்சி எதிர்பார்த்ததைவிட வலுவாக இருந்தது. இது சர்வதேச நாணய நிதியம் தனது முன்கணிப்பை எதிர்காலத்தில் மேம்படுத்தக்கூடும். அந்த நேரத்தில், இந்தியாவின் திருத்தப்பட்ட வளர்ச்சி எண்ணை நாங்கள் வெளியிடுவோம். இந்தியாவைப் பொறுத்தவரை, அது உலகளாவிய வளர்ச்சியின் ஒரு முக்கிய உந்து சக்தியாக இருந்து வருகிறது. அதன் வளர்ச்சி மிகவும் வலுவாக உள்ளது'' என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# தமிழகத்தில் ஜன.22 வரை வறண்ட வானிலை!

சென்னை, ஜன.17-

தமிழகத்தில் நாளை முதல் ஜனவரி 22ம் தேதி வரை வறண்ட வானிலையே நிலவ வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வடகிழக்கு பருவமழை அடுத்த ஓரிரு நாட்களில் தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்னிந்திய பகுதிகளிலிருந்து விலகுவதற்கான வாய்ப்புள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் நாளை (ஜன.17) முதல் ஜனவரி 22ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக் கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். தமிழகத்தில் குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) வழக்கமான அளவை ஒட்டி இருக்கக் கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) அளவுகளின்படி அதிகபட்சமாக சமவெளிப்பகுதியான தருமபுரியில் 18.5 டிகிரி, மலைப்பகுதியான கொடைக்கானலில் 7.4 டிகிரி செல்சியஸ் அளவை ஒட்டி இருக்கக்கூடும். சென்னை, புறநகரில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். இன்று முதல் 20ம் தேதி வரை மீனவர்களுக்கான எச்சரிக்கை ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொங்கல்: சென்னை திரும்ப வசதியாக சனிக்கிழமை 3,500+ சிறப்பு பேருந்துகள் இயக்கம்



சென்னை ,ஜன.17-

பொங்கல் பண்டிகைக்காக சொந்த ஊர் சென்றவர்கள் சென்னை திரும்ப வசதியாக நாளை (ஜன.17) 3,507 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது. பொங்கல் பண்டிகையை கொண்டாட சென்னையில் வசிக்கும் வெளிமாவட்ட மக்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றனர். பேருந்துகள், ரயில்கள், விமானம், சொந்த வாகனங்கள் மூலம் 18 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் சொந்த ஊர் சென்றனர். தமிழக அரசு போக்குவரத்து துறை சார்பில் கடந்த 9ம் தேதி முதல் 14ம் தேதி வரை 6 நாட்களில் 21,282 பேருந்துகள் இயக்கப்பட்டன. இவற்றில் 9.80 லட்சம் பேர் பயணம் செய்தனர். இதனிடையே, சொந்த ஊர் சென்ற மக்கள் சென்னை திரும்ப வசதியாக இன்று முதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பொங்கல் விடுமுறை ஞாயிற்றுக்கிழமை வரை இருக்கிறது, பெரும்பாலானார் ஞாயிற்றுக்கிழமை மதியத்துக்கு பின் ஊர் திரும்பவும், ஒரு சிலர் கூட்டத்தை தவிர்க்க சனிக்கிழமை காணும் பொங்கல் கொண்டாடங்களை முடித்து கொண்டு ஊர் திரும்பவும் திட்டமிட்டுள்ளனர். இன்று மாட்டுப்பொங்கல் என்பதால் குறைந்த அளவிலான பயணிகளே ஊர் திரும்ப திட்டமிட்டனர். இதன் காரணமாக இன்று பல்வேறு இடங்களிலிருந்து சென்னைக்கு வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன் கூடுதலாக 775 பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டன. அரசு அலுவலக பணியாளர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் சென்னை திரும்ப திட்டமிட்டுள்ளனர். இதற்காக சனிக்கிழமை வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக 1,415 பேருந்துகள் என மொத்தம் 3,507 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. அதேபோல சென்னையைத் தவிர மற்ற நகரங்களுக்கு 2,060 பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை சென்னைக்கு கூடுதலாக 3,100 பேருந்துகளும், மற்ற நகரங்களுக்கு 4,080 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.



# அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் சிறந்த மாடுபிடி வீரராக பாலமுருகன் தேர்வு

மதுரை, ஜன.17-

மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் 22 காளைகளை அடக்கி சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்ட வலையங்குளம் பாலமுருகனுக்கு கார் பரிசும், சிறந்த காளைக்கான டிராக்டர் பரிசை அவனியாபுரம் விருமாண்டி மந்தை முத்துக்கருப்பன் காளைக்கும் அமைச்சர் பி. மூர்த்தி வழங்கினார்.

மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தொடங்கியது முதல் இறுதி சுற்று வரை விறுவிறுப்பாக நடந்தது. 940 காளைகள் அவிழ்க்கப்பட்டன. 47 காளைகள் தகுதி நீக்கம் செய்யப்பட்டன. மாடுபிடி வீரர்கள் 30 பேர் மற்றும் பார்வையாளர்கள், மாட்டு உரிமையாளர்கள் என 50க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இப்போட்டியில் முதல் மற்றும் இரண்டாம் பரிசுக்கான இறுதிச்சுற்று விறுவிறுப்பாக நடந்தது. இதில் சிறந்த மாடுபிடி வீரர்களாக முதலிடம் பெற்ற வளையங்குளம் பாலமுருகன் 22 காளைகளை அடக்கினார். அவருக்கு முதல் பரிசாக ரூ.8 லட்சம் மதிப்புள்ள நிஸான் கார் வழங்கப்பட்டது.

2வது இடம் பெற்ற அவனியாபுரம் கார்திக் 17 காளைகளை பிடித்தார்.அவருக்கு பைக் பரிசாக வழங்கப்பட்டது. இவர் கடந்த முறை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறந்த மாடு பிடி வீரராக இரண்டாவது இடம் பரிசு பெற்றவர்.

சிறந்த காளையாக அவனியாபுரம் விருமாண்டி மந்தை முத்து கருப்பன்காளை முதல் பரிசு வென்றது. இக்காளை 60 வினாடிகள் மைதானத்தில் நின்று விளையாடியது. இந்த காளையின் உரிமையாளருக்கு ரூ.9 லட்சம் மதிப்புள்ள டிராக்டர் பரிசு வழங்கப்பட்டது.ஜி ஆர் கார்த்திக் என்பவரின் காளை 2வது பரிசு பெற்றது. இந்த காளை 25 வினாடிகள் விளையாடியது.

சிறந்த வீரர், காளை உரிமையாளர் ஆகியோருக்கு அமைச்சர் மூர்த்தி பரிசுகளை வழங்கினார். ஆட்சியர் பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன்,மாநகர காவல் ஆணையர் லோகநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# மகாராஷ்டிரா உள்ளாட்சித் தேர்தல்: மும்பை மாநகராட்சியை கைப்பற்றுகிறது பாஜக சிவ சேனா கூட்டணி



மும்பை, ஜன.17-

மகாராஷ்டிரா தலைநகர் மும்பை உட்பட 29 மாநகராட்சிகளுக்கு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெரும்பாலான மாநகராட்சிகளில் பாஜக சிவ சேனா கூட்டணி முன்னிலை வகித்து வருகிறது. குறிப்பாக, மும்பை மாநகராட்சியை இக்கூட்டணி கைப்பற்றுகிறது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் மும்பை, புனே உள்ளிட்ட 29 மாநகராட்சிகளுக்கான தேர்தல் நேற்று (ஜனவரி 15) நடைபெற்ற நிலையில், இன்று காலை 10 மணி முதல் வாக்கு எண்ணிக்கை தொடங்கி நடைபெற்று வருகிறது.

மதியம் நிலவரப்படி, மகாராஷ்டிராவில் மொத்தமுள்ள 2,869 வர்டுகளில் பாஜகசிவ சேனா கூட்டணி 1,145 வார்டுகளில் முன்னிலை வகிக்கிறது. சிவ சேனா(உத்தவ் தாக்கரே பிரிவு)மகாராஷ்டிரா நவ நிர்மாண்(எம்என்எஸ்) கூட்டணி 136 வார்டுகளில் முன்னிலை வகிக்கிறது. காங்கிரஸ் 179 வார்டுகளிலும், சரத்பவாரின் என்சிபி 111 வார்டுகளிலும், ஏஐஎம்ஐஎம் 41 வார்டுகளிலும் முன்னிலை வகிக்கின்றன

தலைநகர் மும்பையில் மொத்தமுள்ள 227 வார்டுகளில் பாஜகசிவ சேனா கூட்டணி 118 வார்டுகளில் முன்னிலை வகிக்கின்றன. இதில், பாஜக 89 வார்டுகளிலும், சிவ சேனா 29 வார்டுகளிலும் முன்னிலை வகிக்கின்றன. இதன்மூலம், மும்பை மாநகராட்சியை இந்த கூட்டணி கைப்பற்றுவது உறுதியாகியுள்ளது. சிவ சேனா(உத்தவ் தாக்கரே)எம்என்எஸ் கூட்டணி மும்பையில் 77 வார்டுகளில் முன்னிலை வகிக்கிறது. இதில், சிவ சேனா(உத்தவ் தாக்கரே) 71 வார்டுகளிலும் எம்என்எஸ் 6 வார்டுகளிலும் முன்னிலை வகிக்கின்றன. மும்பையில் காங்கிரஸ் 7 வார்டுகளில் முன்னிலை வகிக்கிறது.

நவி மும்பை மாநகராட்சியையும் பாஜக சிவ சேனா கூட்டணி கைப்பற்றுகிறது. இக்கூட்டணி மொத்தமுள்ள 111 வார்டுகளில் 100 வார்டுகளில் முன்னிலை வகிக்கிறது. இதில், பாஜக 72, சிவ சேனா 28 வார்டுகளில் முன்னிலை வகிக்கின்றன. இங்கு சிவ சேனா(உத்தவ் தாக்கரே) 2 வார்டுகளில் முன்னிலை வகிக்கிறது.

கடைசியாக 2017ல் நடந்த மும்பை மாநகராட்சி தேர்தலில் சிவசேனா கட்சி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து, பாஜகவின் ஆதரவுடன் ஆட்சியமைத்தது. ஏறக்குறைய 26 ஆண்டுகளாக மும்பை மாநகராட்சியை ஒருங்கிணைந்த சிவ சேனா தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த நிலையில், தற்போது அது பாஜக சிவ சேனா கூட்டணி வசம் சென்றுள்ளது.

தானே, நாஷிக், புனே, பிம்பிரி சின்ச்வாட், பன்வெல், கல்யாண் டோம்பிவல்லி, மீரா பையாந்தர், உல்ஹாஸ்நகர் உள்ளிட்ட மாநகராட்சிகளிலும் பாஜக சிவ சேனா கூட்டணியே முன்னிலை வகிக்கிறது.

# சென்னை கடற்கரை வேளச்சேரி இடையே 3 சிறப்பு ரயில்கள் இயக்கம்



சென்னை, ஜன.17-

காணும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மெரினா கடற்கரைக்கு செல்லும் பயணிகள் வசதிக்காக, கடற்கரை வேளச்சேரி இடையே சனிக்கிழமை 3 சிறப்பு மின்சார ரயில்கள் இயக்கப்பட உள்ளன. சென்னை கடற்கரையில் இருந்து சனிக்கிழமை (ஜன.17) பிற்பகல் 2.50, மாலை 4.55, 6.50 ஆகிய நேரங்களில் சிறப்பு மின்சார ரயில்கள் புறப்பட்டு, வேளச்சேரியை முறையே பிற்பகல் 3.35, மாலை 5.40, இரவு 7.35 ஆகிய நேரங்களில் சென்றடையும். வேளச்சேரியில் இருந்து சனிக்கிழமை மதியம் 3.30, மாலை 4.00, 5.45 ஆகிய நேரங்களில் சிறப்பு மின்சார ரயில்கள் புறப்பட்டு, சென்னை கடற்கரையை முறையே பிற்பகல் 2.18,மாலை 4.48,6.33 ஆகிய நேரங்களில் அடையும் என சென்னை ரயில்வே கோட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தமுறை குண்டு இலக்கை தவறவிடாது' ட்ரம்ப்புக்கு ஈரான் எச்சரிக்கை!



தெஹ்ரான், ஜன.17-

கடந்த 2024ம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த ஒரு துப்பாக்கிச் சூட்டில் டொனால்டு ட்ரம்ப் நூலிழையில் உயிர் தப்பிய படத்துடன், 'இந்த முறை குண்டு இலக்கை தவறவிடாது' என எழுதப்பட்ட வாசகத்துடன் ஈரானில் நடைபெற்ற ஊர்வலம் குறித்த செய்தியை ஈரான் அரசு தொலைக்காட்சி நேற்று ஒளிபரப்பியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது, டொனால்டு ட்ரம்ப்பக்கான ஈரானின் நேரடி எச்சரிக்கையாகக் கருதப்படுகிறது. ஈரான் ஆட்சியாளர்களுக்கு எதிராக அந்நாட்டில் கடந்த சில வாரங்களாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில், போராட்டக்காரர்கள் தரப்பில் 2,500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். பாதுகாப்புப் படையினர் தரப்பில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட பாதுகாப்புப் படையினரின் உடல்களின் இறுதி ஊர்வலம் தெஹ்ரானில் நடைபெற்றது. இதில், ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களில் பலர் அந்த நாட்டின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் புகைப்படங்களை ஏந்தியவாறு பங்கேற்றனர். மேலும் பலர், அமெரிக்காவுக்கு மரணம் என அச்சிடப்பட்ட பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

இதில் பங்கேற்ற ஒரு நபர், கடந்த 2024ம் ஆண்டு அமெரிக்காவின் பென்சில்வேனியாவின் பட்லரில் நடந்த ஒரு பிரச்சாரக்கூட்டத்தில் டொனால்டு ட்ரம்ப் பேசிக் கொண்டிருக்கும்போது நிகழ்ந்த துப்பாக்கிச் சூடு குறித்த புகைப்படத்தை ஏந்தியவாறு பங்கேற்றார். அந்த புகைப்படத்தில், 'இந்த முறை குண்டு இலக்கை தவறவிடாது' என பாரசீக மொழியில் எழுதப்பட்ட வாசகம் எழுதப்பட்டிருந்தது.

இந்த வீடியோ, அரசு கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சியான இஸ்லாமிய குடியரசு ஈரான் செய்தி நெட்வொர்க் என்ற தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. இது, டொனால்டு ட்ரம்ப்புக்கான ஈரானின் நேரடி எச்சரிக்கையாகப் பார்க்கப்படுகிறது. டொனால்டு ட்ரம்ப்புக்கு எதிராக கடந்த காலங்களில் நடந்த பல்வேறு சம்பவங்களின் பின்னணியில் ஈரான் அரசு இருந்ததாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

வெளிநாடுகளில் நிகழ்ந்த பல்வேறு கொலைச் சதித்திட்டங்களுடனும் ஈரான் அரசு இதற்கு முன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அவை, பெரும்பாலும் ஈரானிய அதிருப்தியாளர்களை இலக்காகக் கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் தொடர் பதற்றம்: இந்தியர்களை மீட்க மத்திய அரசு தீவிரம்

டெஹ்ரான், ஜன.17-

ஈரானில் நிலவும் உள்நாட்டுப் போராட்டங்கள் மற்றும் அங்கு நிலவும் பதற்றமான சூழலைக் கருத்தில் கொண்டு, இந்தியர்களைப் பாதுகாப்பாக தாயகம் அழைத்து வர மத்திய வெளியுறவு அமைச்சகம் தீவிர ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

ஈரானில் உள்ள இந்தியர்களைப் பாதுகாப்பாக மீட்பதற்குத் தேவையான அனைத்து வழிமுறைகளையும் கையாளுமாறு வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோருக்குப் பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.

முதற்கட்டமாக அங்குள்ள இந்தியர்கள் விமானங்கள் மூலம் வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நிலைமை மேலும் மோசமடைந்தால், அவர்களை மீட்க இந்திய விமானப்படை மற்றும் இந்தியக் கடற்படை கப்பல்கள் மற்றும் விமானங்கள் பயன்படுத்தப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈரானில் உள்ள இந்தியர்கள் அங்கு கிடைக்கும் எந்தவொரு போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தியாவது உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து ஆலோசித்துள்ளார்.

ஈரானில் மோசமடைந்து வரும் பொருளாதாரம் மற்றும் தற்போதைய ஆட்சிக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்களில் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர். இது ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பதற்றத்தை அதிகரித்துள்ளது.

இந்தியக் குடிமக்கள் மறு உத்தரவு வரும் வரை ஈரானுக்குப் பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

# அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு தனது ‘அமைதி’ நோபல் பரிசை வழங்கிய மச்சாடோ!



வாஷிங்டன், ஜன.17-

வெனிசுலா நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ, கடந்த ஆண்டு தான் பெற்ற அமைதிக்கான நோபல் பரிசுக்கான பதக்கத்தை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்புக்கு வழங்கியுள்ளார்.

கடந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலா நாட்டில் ஜனநாயகம் மலர போராடிய மரியா கொரினா மச்சாடோவுக்கு அறிவிக்கப்பட்டது. அப்போதே அந்தப் பரிசை ட்ரம்ப்புக்கு அர்ப்பணிப்பதாக அவர் தெரிவித்திருந்தார். இந்நிலையில், அதிபர் ட்ரம்ப்பை வெள்ளை மாளிகையில் அவர் சந்தித்து பேசினார். அப்போது தனது நோபல் பரிசை ட்ரம்ப்புக்கு அவர் வழங்கினார்.

“அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வசம் அமைதிக்கான நோபல் பரிசை நான் வழங்கினேன். இது எங்கள் தேசத்தின் சுதந்திரத்துக்காக அவரது தனித்துவ அர்ப்பணிப்பிற்கான அங்கீகாரம்” என மரியா கொரினா மச்சாடோ தெரிவித்தார். வெள்ளை மாளிகைக்கு வெளியே பத்திரிகையாளர்களை அவர் சந்தித்தார். அப்போது அவரது ஆதரவாளர்கள் அங்கு திரண்டது குறிப்பிடத்தக்கது.

நோபல் பரிசை தனக்கு வழங்கிய மச்சாடோவுக்கு சமூக வலைதள பதிவு மூலம் அதிபர் ட்ரம்ப் நன்றி சொல்லியுள்ளார். ‘நோபல் பரிசை பெற்றவர்கள் அதை அடுத்தவருக்கு பகிரவோ, மாற்றவோ முடியாது’ என இந்த விவகாரம் தொடர்பாக நோபல் கமிட்டி குழு தெரிவித்துள்ளது.

“எனது 2வது ஆட்சி காலத்தில் 8 மாதத்தில் 8 போர்களை நிறுத்தியதால், நோபல் பரிசு பெற, வரலாற்றில் என்னைவிட தகுதியானவர் வேறு யாரும் இல்லை. ஒபாமாவுக்கு நோபல் பரிசு கிடைத்தது. அவருக்கு அதைபற்றி எதுவுமே தெரியாது. அவருக்கு எதற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது? எதுவும் செய்யாமல் அமெரிக்க அதிபராக பதவியேற்றவுடனே, அவர் நோபல் பரிசு பெற்றார்” என்று அண்மையில் கூட நோபல் பரிசு குறித்து தனது விருப்பத்தை ட்ரம்ப் வெளிப்படுத்தி இருந்தார்.

இந்நிலையில், இப்போது அவர் வசமாகியுள்ளது நோபல் பரிசு. “மரியா கொரினா மச்சாடோ அற்புதமானவர். பல்வேறு சவால்களை கடந்து வந்துள்ளார். அவர் பெற்ற அமைதிக்கான நோபல் பரிசை நான் மேற்கொண்ட பணிக்காக எனக்கு வழங்கினார். இதுவொரு பரஸ்பர மரியாதையின் மீதான அற்புத செயலாகும். மரியாவுக்கு நன்றி” என சமூக வலைதள பதிவில் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெனிசுலா அரசியல் சூழல்: கடந்த 3ம் தேதி வெனிசுலா தலைநகர் கராகஸ் மீது அமெரிக்க ராணுவம் திடீர் தாக்குதலை நடத்தியது. அந்நாட்டு அதிபர் நிக்கோலஸ் மதுரோ, அவரது மனைவி சிலாயா புளோரஸ் கைது செய்யப்பட்டனர். இருவரும் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டனர். தொடர்ந்து அந்நாட்டின் இடைக்கால அதிபராக துணை அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் பதவியேற்றார்.

வெனிசுலாவில் ஜனநாயக ஆட்சியை உறுதி செய்ய தான் கடமைப்பட்டுள்ளதாக அதிபர் ட்ரம்ப் அண்மையில் தெரிவித்தார். வெனிசுலாவின் இடைக்கால டெல்சி உடன் இணைந்து பணியாற்ற தயார் என்றும் அவர் சமிக்ஞை கொடுத்தது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் மச்சாடோவுக்கு உள்நாட்டில் உள்ள ஆதரவு குறித்து ட்ரம்ப் சந்தேகத்தில் உள்ளதாகவும் தகவல். இந்த சூழலில்தான் ட்ரம்ப் மற்றும் அமெரிக்க அரசுடன் மச்சாடோ நெருக்கம் காட்டி வருகிறார்.

# உச்ச நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜிக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



புதுடெல்லி. ஜன.17-

அதிமுக ஆட்சி காலத்தில் போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி வேலைக்கு பணம் பெற்ற விவகாரத்தில் தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் அவருக்கு ஜாமீன் வழங்கி உள்ளது. இந்த நிலையில் செந்தில் பாலாஜி தொடர்பான வழக்கு அனைத்தையும் ஒன்றாக இணைத்து விசாரிப்பதற்கு எதிராக ஒய்.பாலாஜி என்பவர் தொடர்ந்த வழக்கானது உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் சூர்யகாந்த் தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பாலாஜி சீனிவாசன்,’’இந்த வழக்கில் அரசு சிறப்பு வழக்கறிஞரை மாற்றி விட்டு புதிய பெயரை பரிந்துரை செய்ய வேண்டும் என்று, முன்னதாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் நாங்கள் பரிந்துரை கொடுத்திருக்கிறோம்.

குறிப்பாக இந்த வழக்கை தாமதப்படுத்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சாட்சிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் எங்களது தரப்பின் முக்கிய கோரிக்கை என்னவென்றால், குற்றம் புரிந்த, அதற்கு உடந்தையாக இருந்தவர்களை மட்டும் முதலில் பிரதானமாக விசாரிக்க வேண்டும். அப்போது தான் வழக்கில் தீர்வு விரைவாக முடியும் என தெரிவித்தார். அப்போது அமலாக்கத்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்,’’இந்த வழக்கில் வாதிட்டு வந்த மூத்த வழக்கறிஞர்கள் இல்லாத காரணத்தினால் வழக்கை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்க வேண்டும். இதுகுறித்த கடிதம் முன்னதாகவே உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார். இதையடுத்து வழக்கின் விசாரணையை வரும் பிப்ரவரி மாதம் முதல் வாரத்திற்கு ஒத்திவைத்தனர்.

# வேலூர் சிஎம்சி மருத்துவமனை டாக்டர்கள் குடியிருப்பில் அமலாக்கத்துறை ரெய்டு




வேலூர், ஜன.17-

வேலூரில் உள்ள சிஎம்சி மருத்துவமனை டாக்டர்கள் குடியிருப்பில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையிட்டு வருகின்றனர். வேலூர் ஆற்காடு சாலையில் சிஎம்சி மருத்துவமனை இயங்கி வருகிறது. இங்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள், வெளிநாட்டில் இருந்து தினமும் ஏராளமான நோயாளிகள் வந்து பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை பெற்று செல்கின்றனர். இந்நிலையில் இன்று காலை அமலாக்கத்துறையினர் 2 வாகனங்களில் தனியார் மருத்துவமனைக்கு வந்தனர். பின்னர் அங்கிருந்து தோட்டப்பாளையம் பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள தனியாருக்கு சொந்தமான டாக்டர்கள் குடியிருப்புக்கு சென்றனர்.

அங்கு துப்பாக்கி ஏந்திய மத்திய தொழிற்பாதுகாப்புபடையினர் உதவியுடன் குடியிருப்பில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக சோதனை நடந்து வருகிறது. ஆனால் என்ன காரணத்திற்காக சோதனை நடக்கிறது என தெரியவில்லை. மருத்துவமனைக்கு மருந்துகள் கொள்முதல் செய்ததில் முறைகேடு நடந்ததா?, அல்லது வேறு ஏதாவது காரணமா என்ற விவரம் தெரியவில்லை. டாக்டர்கள் குடியிருப்பில் சோதனை நடந்து வரும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# காணும் பொங்கல்: கோயம்பேடு காய்கறி சந்தைக்கு விடுமுறை



சென்னை, ஜன.17-


காணும் பொங்கல் விழாவை முன்னிட்டு கோயம்பேடு காய்கறி சந்தைக்கு சனிக்கிழமை (ஜன.17) விடுமுறை விடப்படுகிறது.

கோயம்பேடு சந்தையில் 1200க்கும் மேற்பட்ட காய்கறி கடைகள் இயங்கி வருகின்றன. இந்த கடைகளுக்கு தினமும் சுமார் 3 ஆயிரம் டன்னுக்கு மேற்பட்ட காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. இங்கு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

விவசாயிகளும் விவசாய தொழிலாளர்களும் மாட்டுப் பொங்கல் மற்றும் அடுத்த நாள் காணும் பொங்கல் விழா கொண்டாடத்தில் ஈடுபடுவார்கள். அதனால் கோயம்பேடு சந்தைக்கு சனிக்கிழமை காய்கறிகள் வரத்து இருக்காது. லாரி ஓட்டுநர்களும், கோயம்பேடு சந்தை சுமை தூக்கும் தொழிலாளர்களும் பொங்கல் விடுமுறையில் சொந்த ஊர்களுக்கு செல்ல உள்ளனர்.

எனவே, காய்கறி சந்தைக்கு சனிக்கிழமை ஒருநாள் விடுமுறை விடுவது என வியாபாரிகள் சங்கத்தினர் முடிவெடுத்துள்ளனர். அதே நேரத்தில், கோயம்பேடு சந்தை வளாகத்தில் மலர், பழச்சந்தைகள் வழக்கம்போல் இயங்கும் என அப்பகுதி வியாபாரிகள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

# காணும் பொங்கல்: சென்னை மெரினா கடற்கரையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி?



சென்னை, ஜன.17-

காணும் பொங்கலை ஒட்டி சுற்றுலா தலங்கள், பொழுதுபோக்கு பூங்காக்களில் பொதுமக்கள் குடும்பம் குடும்பமாக திரள்வார்கள் என்பதால், சென்னையில் பாதுகாப்புப் பணியில் 16 ஆயிரம் போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொங்கல் பண்டிகையின் ஒரு பகுதியாக காணும் பொங்கல் சனிக்கிழமை உற்சாகமாக கொண்டாடப்படவுள்ளது. இந்நாளில் பொதுமக்கள் கடற்கரை, பூங்கா உள்ளிட்ட பொழுதுபோக்கு மையங்களுக்கு குடும்பம், குடும்பமாக சென்று உற்சாகமாக கொண்டாட்டத்தில் ஈடுபடுவார்கள். எனவே மக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் எவ்வித அசம்பாவிதமும் நிகழாமல் இருக்க காவல் ஆணையர் அருண் சென்னையில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளார்.

குறிப்பாக நகர் முழுவதும் 16 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு, கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் 1,500 ஊர்க்காவல் படையினர் ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றனர். மெரினா கடற்கரையில் மட்டும் சுமார் 3 லட்சம் பேர் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே உழைப்பாளர் சிலை முதல் காந்தி சிலை வரை 3 தற்காலிக காவல் கட்டுப்பாட்டறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மெரினா கடற்கரை இந்த பகுதிகளில் உள்ள 7 சர்வீஸ் சாலைகளின் நுழைவு வாயில்களில் காவல் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவசர மருத்துவ உதவிக்காக மருத்துவக் குழுவினருடன் 8 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் மீட்புப் பணிக்காக தீயணைப்பு வீரர்கள் அடங்கிய 2 தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிக்காக மோட்டார் படகுகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட நீச்சல் தெரிந்த தன்னார்வலர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

காணும் பொங்கலன்று மெரினாவில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கடலில் இறங்குவதைத் தடுக்க கடற்கரையோரம் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. கூட்ட நெரிசலில் குழந்தைகள் காணாமல் போனால் அவர்களை உடனடியாக மீட்பதற்காக குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் கைகளில் பிரத்யேக அடையாளப் பட்டை (பேண்ட்) கட்டிவிடப்படுகிறது.

மணற்பரப்பில் 4 ட்ரோன் கேமராக்கள் மற்றும் பெசன்ட் நகர் எலியட்ஸ் கடற்கரை மணற்பரப்பில் 4 ட்ரோன் கேமராக்கள் என மொத்தம் 8 கேமராக்கள் பயன்படுத்தப்பட்டு, தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. மேலும் அதிக திறன் கொண்ட ‘ஏஐ’ ட்ரோன் கேமராக்கள் பயன்படுத்தப்பட்டு அவை மூலம் கடலோர மணற்பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு காவல் துறையின் எச்சரிக்கைத் தகவல்களை ஒலிபரப்பி வருகின்றனர்.

இதேபோல கிண்டி சிறுவர் பூங்கா, தீவுத்திடலில் உள்ள சுற்றுலா பொருட்காட்சி, செம்மொழி பூங்கா உள்ளிட்ட இடங்களிலும் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதேபோல் பைக் ரேஸ் மற்றும் சாகசத்தை தடுப்பதற்காக கிண்டி, அடையாறு, தரமணி, நீலாங்கரை, துரைப்பாக்கம், மதுரவாயல் உள்ளிட்ட பகுதிகளில் கண்காணிப்பு சோதனை குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

# ஈரான் பிடியில் 16 இந்திய மாலுமிகள்: விரைந்து மீட்க உறவினர்கள் வேண்டுகோள்!

புதுடெல்லி, ஜன.17-

கடந்த மாதம் ஈரானின் இஸ்லாமிய புரட்சிக் காவல் படையினர், ‘வேலியன்ட் ரோர்’ என்ற சரக்கு கப்பலை சர்வதேச கடல் பகுதியில் சிறைபிடித்தனர். அதில் இந்தியாவை சேர்ந்த 16 மாலுமிகள் இருந்தனர்.



தற்போது ஈரான் அரசுக்கு எதிராக மக்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ள நிலையில், சிறைபிடிக்கப்பட்ட 16 இந்தியர்களையும் விரைந்து மீட்க வேண்டும் என அவர்களின் குடும்பத்தினர் பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். சிறைபிடிக்கப்பட்ட சரக்கு கப்பலில் இலங்கை மற்றும் வங்கதேசத்தை சேர்ந்த மாலுமி (தலா ஒருவர்) இருந்ததாகவும் தகவல் கிடைத்துள்ளது.

என்ன நடந்தது? கடந்த டிசம்பர் மாதம் 8ம் தேதி அன்று ஐக்கிய அரபு அமீரகத்தை சேர்ந்த கப்பல் நிறுவனத்துக்கு சொந்தமான ‘வேலியன்ட் ரோர்’ சரக்கு கப்பல் டிப்பா துறைமுகத்துக்கு அருகே உள்ள சர்வதேச கடல் எல்லை பகுதியில் சென்று கொண்டிருந்தது. அப்போது ஈரானின் இஸ்லாமிய புரட்சிக் காவல் படையினர், அந்த சரக்கு கப்பலை விரட்டி வந்து, துப்பாக்கி சூடு நடத்தி சிறைபிடித்துள்ளனர். மேலும், அந்த கப்பலை ஈரானில் உள்ள பந்தர்இஜாஸ்க் துறைமுகத்துக்கு கொண்டு சென்றுள்ளனர். இதை மாலுமிகளின் குடும்பத்தினர் உறுதி செய்துள்ளனர்.

சரக்கு கப்பலில் ஆறு மில்லியன் லிட்டர் டீசல் கடத்தப்பட்டதாக ஈரான் ராணுவம் குற்றச்சாட்டு வைத்தது. ஆனால், அந்த சரக்கு கப்பலில் சல்பர் திரவம் மட்டுமே இருந்ததாக தகவல்.

சரக்கு கப்பல் மற்றும் மாலுமிகளை சிறை பிடித்தது குறித்து இதுவரை எந்தவொரு முறையான உத்தரவையும் வெளியிடவில்லை என மாலுமிகள் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். கப்பலில் இருந்த 18 மாலுமிகளில் 10 பேரை கைது செய்து பந்தர் அப்பாஸ் சிறையில் ஈரான் ராணுவம் அடைத்துள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது. அவர்களில் சிலர் காயமடைந்துள்ளதாகவும் தகவல். மேலும், ஈரானில் அரசுக்கு எதிராக மக்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ள நிலையில், 16 இந்திய மாலுமிகளையும் விரைந்து மீட்க வேண்டும் என அவர்கள் இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஈரான் மக்கள் போராட்டம்: ஈரான் ஆட்சியாளர்களுக்கு எதிராக அந்நாட்டில் கடந்த சில வாரங்களாக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில், போராட்டக்காரர்கள் தரப்பில் 2,500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.

# அதிக விலைக்கு தனியாரிடம் மின்சாரம் வாங்கும் திமுக திட்டத்தை அனுமதிக்கக்கூடாது: அன்புமணி



சென்னை, ஜன.17-

மீண்டும், மீண்டும் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்க ஒழுங்குமுறை ஆணையம் அனுமதிக்கக் கூடாது என்று பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: ”தமிழ்நாட்டில் பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை மாலை நேர மின் தேவையை சமாளிப்பதற்காக 1553 மெகா வாட் மின்சாரம் தேவைப்படுவதாகவும், அந்த அளவு மின்சாரத்தை ஒரு யூனிட் ரூ.8.50 முதல் ரூ.9.50 வரை விலை கொடுத்து வாங்க அனுமதி அளிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம், தமிழ்நாடு மின்சார வாரியம் விண்ணப்பித்திருக்கிறது. இந்த அளவுக்கு அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவது மின்வாரியத்திற்கு இழப்பையே ஏற்படுத்தும். திமுக ஆட்சிக்கு வந்த நாள் முதலாகவே தனியாரிடம் இருந்து அதிக விலை கொடுத்து வாங்கும் மின்சாரத்தின் அளவு அதிகரித்துக்கொண்டே தான் செல்கிறதே தவிர குறையவில்லை. தமிழ்நாடு மின்சார வாரியமே வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படி மாநிலத்தின் மொத்த மின் தேவையில் வெறும் 16% மட்டுமே மின்சார வாரியத்தால் சொந்தமாக உற்பத்தி செய்யப்படுகிறது. திமுக ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், இன்று வரை ஒரே ஒரு மெகாவாட் அளவுக்கு கூட புதிய மின் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. கடந்த ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த மின் தேவை 13,860 கோடி யூனிட் எனும் நிலையில், அதில் 80.66 விழுக்காடான 11 ஆயிரத்து 179 கோடி யூனிட் மின்சாரத்தை மத்திய மின் தொகுப்பு, தனியார் மின் நிறுவனங்கள், மின்சார சந்தைகள் ஆகியவற்றிடம் இருந்து தான் மின்சார வாரியம் வாங்கியிருக்கிறது. இவ்வாறு வாங்குவதற்காகவே மின்னுற்பத்தித் திட்டங்களை செயல்படுத்தாமல் திமுக அரசு தாமதப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் ரூ.45,000 கோடி அளவுக்கு மின்சாரக் கட்டணத்தை திமுக அரசு உயர்த்திய பிறகும் மின்சார வாரியம் நஷ்டத்தில் தான் இயங்கி வருகிறது. காரணம்.... தனியாரிடம் இருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்படுவது தான். மீண்டும், மீண்டும் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்க ஒழுங்குமுறை ஆணையம் அனுமதிக்கக்கூடாது. சந்தை சராசரி விலையைக் கணக்கிட்டு, அதற்கும் குறைவான விலையிலேயே 1553 மெகா வாட் மின்சாரத்தையும் வாங்க ஒழுங்குமுறை ஆணையம் ஆணையிட வேண்டும்.” என்று அன்புமணி கூறியுள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161